CNR No.TNVR070003682021
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்

2023ம் ஆண்டு ஜுலை திங்கள் 17ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண்.25/2021
-------------

1. மைனர் காவியா
2. மைனர் பிரதீப் கார்த்திக்
(மேற்படி மைனர் வாதிகளுக்கு தாயாரும்
சினேகதியுமான சித்ரா
க/பெ.மணிவாசகம் மூலமாக) ... வாதி

/எதிர்/

1. ராஜேந்திரன்
2. ஈஸ்வரி
3. லட்சுமி
4. ராஜஜோதி
5. செல்வதேவி
6. மணிவாசகம்
7. காளை (எ) கார்த்திக் ராஜா
8. தேன்மொழி
9. சின்னகிருஷ்ணன்
10. முத்துலட்சுமி
11. தேசம்மாள்
12. காவியா
13. நாச்சியாரம்மாள்
14. சார்பதிவாளர் அவர்கள்
சாத்தூர்
15. மாவட்ட ஆட்சியர் அவர்கள்
விருதுநகர் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 15.04.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 03.06.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.முனீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை

அழைத்தும் ஆஜராகாததாலும், எந்த தகவலும் இல்லாததால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையிலும், வாதியின் வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

தாவா வழக்கில் மைனர் வாதிகளுக்குரிய 7ல் 1 பங்கு பாத்தியத்தில் 1ல் 2 பங்கு பாக பாத்தியத்தை நயமிதம் பார்த்து மைனர் வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்து வழங்கி முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிட வேண்டுமென்றும், தாவா வழக்கில் மோசடி கிரைய ஆவண எண்.763/ 2020ம் செல்லாது என்றும், அது மைனர் வாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்தும், மைனர் வாதிகளுக்கு வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிகள் வழங்கிடக்கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2). வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்:-

பிராது தபசில் கண்ட சொத்துக்களானது ஆதியில் காளைத்தேவர் என்பவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். காளைத்தேவருக்கு இரண்டு மனைவிகள் அவர்களில் முதல் மனைவி பெயர் பெரியலட்சுமியம்மாள், இரண்டாவது மனைவி பெயர் சின்னலட்சுமியம்மாள் ஆவர். பெரியலட்சுமியம்மாள் என்பவருக்கு நமகோடி நாராயணன் மற்றும் ராஜேந்திரன் ஆகிய இரண்டு ஆண்கள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். சின்னலட்சுமியம்மாளுக்கு காளியம்மாள் என்ற பெண் மக்கள் மட்டுமே வாரிசு ஆவார். 1ம் பிரதிவாதி காளைத்தேவரின் வாரிசு ஆவார். 13ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். அவர்களுக்கு பிறந்தவர்கள் தான் 2 முதல் 7 வரையான வாரிசுகள் ஆவார்கள். காளைத்தேவரின் வாரிசுகளான நமகோடிநாராயணன், ராஜேந்திரன் மற்றும் காளியம்மன் ஆகியோர்களுக்கு இடையே தனது தகப்பனாரின் காலத்திலேயே பெண் வாரிசான காளியம்மாளுக்கு நல்லமுறையில் சீர் செனத்திகளும் பண வரவுகளும் கொடுத்து நல்லமுறையில்

திருமணம் செய்து கொடுத்துவிட்டனர். அதன் பிற்பாடு காளைத்தேவரின் பெயரில் உள்ள சொத்துக்களை ஆண் வாரிசுகளான நமகோடி நாராயணன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்துள்ளனர். இந்நிலையில் ஆண் வாரிசுகளுக்கிடையே கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின் மூலமாக பிராது சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது. தனது பாகத்திற்கு கிடைத்த சொத்தினை தனது முழு ஆளுமையில் எந்தவித இடையூறும் இன்றி ஆண்டு அனுபவித்து வந்துள்ளார். 1 மற்றும் 13ம் பிரதிவாதியின் மகனான 6ம் பிரதிவாதிக்கு 13ம் பிரதிவாதியின் உடன்பிறந்த தம்பி பரமசிவன் என்பவரின் மகளுக்கும் திருமணம் பேசி முடிக்க்பபட்டு கடந்த 03.09.2007ம் தேதியில் திருமணம் நடைபெற்றது. அதன்பின்பு திருமண உறவின் பலனாக 1ம் வாதியான மைனர் காவியா கடந்த 21.10.2009ம் தேதியிலும், 2ம் வாதியின் மைனர் பிரதீப் கார்த்திக் கடந்த 16.07.2015ம் தேதிகளில் பிறந்துள்ளனர். திருமண வாழ்க்கை இனிதே சென்று கொண்டிருக்கையில் 6ம் பிரதிவாதி வெளியூரில் வேலை பார்த்து வந்தபோது வேறு சில பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு வாதிகளின் தாயாரிடம் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்து கடந்து 5 ஆண்டுகளுக்கு முன்பு மைனர் வாதிகளை நத்தத்துப்பட்டி கிராமத்தில் தனது தாத்தாவான பரமசிவன் என்பவர் வீட்டில் குடியிருந்து கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றார்கள். இந்த சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பூர்விக சொத்தில் மைனர் வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய பாகத்தை மறைத்து 1 முதல் 7 வரையான பிரதிவாதிகள் மோசடியாக 8 முதல் 13 வரையான பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு கிரையம் செய்து கொடுக்க முயற்சி செய்த விபரம் தெரிந்த மைனர் வாதிகள் 1ம் பிரதிவாதியிடம் சென்று கடந்த 07.02.2020ம் தேதியில் நேரில் சென்று தங்களுக்குரிய 7ல் 1 பங்கு பாகத்தில் 1ல் 2 பங்கு பாகத்தைக் கோரியதில் 1 முதல் 7 மற்றும் 13 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து கொண்டு பாகம் கொடுக்க முடியாது என்று மைனர் வாதிகளை விரட்டியுள்ளனர். அதனால் மேற்படி நபர்களால் மோசடியாக பதிவு கிரையம் செய்யப்பட்டால் மைனர் வாதிகளுக்குரிய பாகம் கிடைக்காமல் போகும் என்பதால் மைனர் வாதிகள்

கடந்த 10.02.2020ம் தேதியில் தனது தாயாரும், சிநேகிதியுமான சித்ரா பெயரில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி சொத்துக்கள் தொடர்பாக பதிவு செய்யக்கூடாது என்று ஆட்சேபணை மனு கொடுத்துள்ளனர். அதனை பெற்றுக்கொண்ட சாத்தூர் சார்பதிவாளர் அவர்கள் மைனர் வாதிகளுக்கு பதிவுதுறை ரசீது எண்.1394/2020 என்ற எண்ணின் கீழ் ரசீது கொடுத்துள்ளனர். ஆனால் மேற்படி சாத்தூர் சார்பதிவாளர் பிராது சொத்துக்களை 8 முதல் 13 வரையான பிரதிவாதிகளுக்கு பதிவு கிரைய ஆவண எண்.763/2020ன் கீழ் பதிவு கிரையம் செய்து விட்டனர். மேற்படி ஆட்சேபணை மனுவிற்கு கடந்த 21.02.2020ம் தேதியில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து ந.க.எண்.61/2020 கீழ் குறிப்பாணை ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பாணையில் மேற்படி ஆட்சேபணையானது உரிமையியல் தொடர்பானது என்பதால் உரிய நீதிமன்றத்தின் மூலமாக தீர்வு காண அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பதிவு கிரைய ஆவணத்தினை ரத்து செய்யக்கோரி கடந்த 13.02.2020ம் தேதியில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மைனர் வாதிகள் தனது தாயாரும், சிநேகிதியுமான சித்ரா மூலமாக மனு செய்துள்ளனர். மேற்படி மனுவிற்கு கடந்த 14.02.2020ம் தேதியில் ந.க.எண்.531/ஆ4/2020 என்ற எண்ணின் கீழ் குறிப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி குறிப்பாணையில் ஆவணத்தை இரத்து செய்யவும் அதிகாரம் பதிவு அலுவலருக்கு இல்லை என்றும், அதனை ரத்து செய்ய உரிய நீதிமன்றத்தின் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனால் மைனர் வாதிகள் வேறு வழியின்றி மைனர் வாதிகளின் வாழ்வாதராத்திற்கும் மைனர் வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய 7ல் 1 பங்கில் 1ல் 2 பங்கு பாகத்தினை மைனர் வாதிகளுக்கு பிரித்து தரக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). பிரதிவாதிக்கு அழைப்பு அனுப்பப்பட்டு, அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட பின்பு பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் நேரடியாக ஆஜராகி, பின்னர் பிரதிவாதி தரப்பில் எந்த தகவலும் இல்லாததாலும், பிரதிவாதி நேரில் ஆஜராகாததாலும், பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பிரதிவாதி ஒருதலைபட்சமாகியுள்ளார்.

4). இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதி கோரியுள்ள பரிகாரம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கக்கூடியதாக உள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

5). வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் ஆஜராகாததால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6). பிராது தபசில் கண்ட சொத்துக்களானது ஆதியில் காளைத்தேவர் என்பவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். காளைத்தேவருக்கு இரண்டு மனைவிகள் அவர்களில் முதல் மனைவி பெயர் பெரியலட்சுமியம்மாள், இரண்டாவது மனைவி பெயர் சின்னலட்சுமியம்மாள் ஆவர். பெரியலட்சுமியம்மாள் என்பவருக்கு நமகோடி நாராயணன் மற்றும் ராஜேந்திரன் ஆகிய இரண்டு ஆண்கள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். சின்னலட்சுமியம்மாளுக்கு காளியம்மாள் என்ற பெண் மக்கள் மட்டுமே வாரிசு ஆவார். 1ம் பிரதிவாதி காளைத்தேவரின் வாரிசு ஆவார். 13ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். அவர்களுக்கு பிறந்தவர்கள் தான் 2 முதல் 7 வரையான வாரிசுகள் ஆவார்கள். காளைத்தேவரின் வாரிசுகளான நமகோடிநாராயணன், ராஜேந்திரன் மற்றும் காளியம்மன் ஆகியோர்களுக்கு இடையே தனது தகப்பனாரின் காலத்திலேயே பெண் வாரிசான காளியம்மாளுக்கு நல்லமுறையில் சீர் செனத்திகளும் பண வரவுகளும் கொடுத்து நல்லமுறையில் திருமணம் செய்து கொடுத்துவிட்டனர். அதன் பிற்பாடு காளைத்தேவரின் பெயரில் உள்ள சொத்துக்களை ஆண் வாரிசுகளான நமகோடி நாராயணன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்துள்ளனர். இந்நிலையில் ஆண் வாரிசுகளுக்கிடையே கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின் மூலமாக பிராது சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது. தனது பாகத்திற்கு கிடைத்த சொத்தினை தனது முழு ஆளுமையில்

எந்தவித இடையூறும் இன்றி ஆண்டு அனுபவித்து வந்துள்ளார். 1 மற்றும் 13ம் பிரதிவாதியின் மகனான 6ம் பிரதிவாதிக்கு 13ம் பிரதிவாதியின் உடன்பிறந்த தம்பி பரமசிவன் என்பவரின் மகளுக்கும் திருமணம் பேசி முடிக்க்பபட்டு கடந்த 03.09.2007ம் தேதியில் திருமணம் நடைபெற்றது. அதன்பின்பு திருமண உறவின் பலனாக 1ம் வாதியான மைனர் காவியா கடந்த 21.10.2009ம் தேதியிலும், 2ம் வாதியின் மைனர் பிரதீப் கார்த்திக் கடந்த 16.07.2015ம் தேதிகளில் பிறந்துள்ளனர். திருமண வாழ்க்கை இனிதே சென்று கொண்டிருக்கையில் 6ம் பிரதிவாதி வெளியூரில் வேலை பார்த்து வந்தபோது வேறு சில பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு வாதிகளின் தாயாரிடம் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்து கடந்து 5 ஆண்டுகளுக்கு முன்பு மைனர் வாதிகளை நத்தத்துப்பட்டி கிராமத்தில் தனது தாத்தாவான பரமசிவன் என்பவர் வீட்டில் குடியிருந்து கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றார்கள். இந்த சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பூர்விக சொத்தில் மைனர் வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய பாகத்தை மறைத்து 1 முதல் 7 வரையான பிரதிவாதிகள் மோசடியாக 8 முதல் 13 வரையான பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு கிரையம் செய்து கொடுக்க முயற்சி செய்த விபரம் தெரிந்த மைனர் வாதிகள் 1ம் பிரதிவாதியிடம் சென்று கடந்த 07.02.2020ம் தேதியில் நேரில் சென்று தங்களுக்குரிய 7ல் 1 பங்கு பாகத்தில் 1ல் 2 பங்கு பாகத்தைக் கோரியதில் 1 முதல் 7 மற்றும் 13 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து கொண்டு பாகம் கொடுக்க முடியாது என்று மைனர் வாதிகளை விரட்டியுள்ளனர் என்று வாதிடப்பட்டது.

7) அதனை பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதன் மூலமாகவோ, சாட்சிய சான்றாவணங்களை தாக்கல் செய்வதன் மூலமாகவோ பிராது தபசில் கண்ட சொத்துக்களானது ஆதியில் காளைத்தேவர் என்பவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றோ, அந்த சொத்துக்களில் மைனர் வாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்றோ, பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றோ நிரூபணம் செய்யவில்லை.

8) வாதி தரப்பில் வா.சா.1ஐ விசாரணை செய்ததன் மூலமும், தபசில் சொத்தில் மைனர் வாதிகளுக்கு பிராதில் குறிப்பிட்டுள்ளது போல் பாகம் உள்ளது என்பதை நிரூபணம் செய்துள்ளார்கள். உண்மையிலேயே, பிராது தபசில் சொத்தில் வாதிகளுக்கு பாத்தியம் இல்லாதிருந்தால் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதிகளின் தரப்பை மறுத்து நிரூபணம் செய்திருப்பார்கள். இந்த வழக்கைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு மறுப்பும் தெரிவிக்கவில்லை. எனவே, தாவா சொத்தில் மைனர் வாதிகளுக்கு 7ல் 1 பங்கு பாத்தியத்தில், 1ல் 2 பங்கு பாக பாத்தியம் உள்ளது என்பதால் வாதியால் கோரப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கத்தக்கதது தான் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9) மேற்படி நபர்களால் மோசடியாக பதிவு கிரையம் செய்யப்பட்டால் மைனர் வாதிகளுக்குரிய பாகம் கிடைக்காமல் போகும் என்பதால் மைனர் வாதிகள் கடந்த 10.02.2020ம் தேதியில் தனது தாயாரும், சிநேகிதியுமான சித்ரா பெயரில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி சொத்துக்கள் தொடர்பாக பதிவு செய்யக்கூடாது என்று ஆட்சேபணை மனு கொடுத்துள்ளனர். அதனை பெற்றுக்கொண்ட சாத்தூர் சார்பதிவாளர் அவர்கள் மைனர் வாதிகளுக்கு பதிவுதுறை ரசீது எண்.1394/2020 என்ற எண்ணின் கீழ் ரசீது கொடுத்துள்ளனர். ஆனால் மேற்படி சாத்தூர் சார்பதிவாளர் பிராது சொத்துக்களை 8 முதல் 13 வரையான பிரதிவாதிகளுக்கு பதிவு கிரைய ஆவண எண்.763/2020ன் கீழ் பதிவு கிரையம் செய்து விட்டனர் என்று குறிப்பிட்டு வாதிடப்பட்டது.

10) இவ்வழக்கைப் பொறுத்து வாதிகளுக்கு 7ல் 1 பங்கு பாத்தியத்தில் 1ல் 2 பங்கு பாக பாத்தியம் உள்ளதால் 1 முதல் 7 மற்றும் 13 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து கொண்டு 8 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவணம் பிறப்பித்து கொடுப்பதற்கு யாதொரு உரிமையும் இல்லை. வாதிகள் தரப்பில் 8 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவண எண்.763/2020 பிறப்பித்து கொடுத்ததாக வா.சா.ஆ.12 ஆன 07.02.2020 தேதியிட்ட கிரைய

ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதன் மூலமாக நிரூபணம் செய்துள்ளார்கள். தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் உள்ளதால் 8 முதல் 13 பிரதிவாதிகள் மேற்படி கிரைய ஆவணத்தை பொறுத்து எவ்வித உரிமையும் கிடையாது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் இல்லை என்றோ, அவ்வாறு இருந்திருந்தாலும் கூட வாதிகளின் பாகம் ஏற்கனவே வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது என்றோ, அந்த பாகத்தை தவிர்த்து தான் வா.சா.ஆ.12 ஆவணம் பிறப்பித்ததாகவோ மறுத்து நிரூபிக்கவில்லை. அது சம்பந்தமாக வாதிகள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அறிவிப்பும் அனுப்பியுள்ளார்கள். வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் உள்ள நிலையில் வாதிகளின் பாகத்தை பிரித்து கொடுக்காமல் பிறப்பித்து கொடுக்கப்பட்டுள்ள கிரைய ஆவண எண்.763/2020 ஆவணம் செல்லாது என்றோ, அது மைனர் வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை செய்யுமாறு வாதிகளால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரத்தை வாதிகளுக்கு வழங்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. தவறும்பட்சத்தில் வாதிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே, இத்தகைய சூழ்நிலையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. வழக்கின் தன்மை மற்றும் தரப்பினர்கள் கருதி அவரவர்களுக்கு ஏற்பட்ட செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

11). இறுதியாக, வாதியின் வழக்கினை செலவு தொகையின்றி அனுமதித்து,

1. தாவா வழக்கில் மைனர் வாதிகளுக்கு உரிய 7ல் 1 பங்கு பாத்தியத்தில் 1ல் 2 பங்கு பாக பாத்தியம் உள்ளது என வாதியால் கோரப்பட்டுள்ள முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு வழங்கியும்,

2. தாவா வழக்கில் உள்ள கிரைய ஆவண எண்.763/2020 செல்லாது என்றும், அது மைனர் வாதிகளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்று வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரத்தை வாதிக்கு வழங்கியும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12). இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்

**வாதி தரப்பு சாட்சிகள்**:-

வா.சா.1 - சித்ரா

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**:-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 - | வாதியின் ஆதார் அட்டை நகல் | |
| வா.சா.ஆ.2 - | 1ம் மைனர் வாதியின் ஆதார் அட்டை நகல் | |
| வா.சா.ஆ.3 - | 2ம் மைனர் வாதியின் ஆதார் அட்டை நகல் | |
| வா.சா.ஆ.4 - | 1ம் மைனர் வாதியின் பிறப்புச்சான்று நகல் | |
| வா.சா.ஆ.5 - | 2ம் மைனர் வாதியின் பிறப்புச்சான்று நகல் | |
| வா.சா.ஆ.6 - | 13.02.2020 | மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 - | புகைப்படம் அசல் | |
| வா.சா.ஆ.8 - | கணினி பட்டா கணினி நகல் | |
| வா.சா.ஆ.9 - | 10.02.2020 | சார்பதிவாளருக்கு அனுப்பிய புகார் மனு ரசீது நகல் |
| வா.சா.ஆ.10 - | 21.02.2020 | குறிப்பாணை அசல் |
| வா.சா.ஆ.11 - | 14.02.2020 | மாவட்ட பதிவாளர் அனுப்பிய புகார் மனு ரசீது அசல் |
| வா.சா.ஆ.12 - | 07.02.2020 | கிரைய ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.13 - | 10.02.2020 | சாத்தூர் சார்பதிவாளர் வழங்கிய ரசீது அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள்**:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.